

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.2.2026) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களின் உடல்நலம் குறித்து அவரது குடும்பத்தினரிடம் விசாரித்து, மருத்துவரிடம் அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் அவர்களின் ஆணைப்படி திருச்சி சிறுகனூரில் வருகின்ற 9ஆம் தேதி 10 லட்சத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்க இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பனிரெண்டாவது பிரம்மாண்டமான மாநில மாநாடு நடைபெறும் இடத்தை கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனை வழங்கினார். உடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் மாநகராட்சி மேயர் அன்பழகன் வழக்கறிஞர் பாஸ்கர், ராஜசேகர் அம்பிகாவதி, கிராப்பட்டி செல்வம், சரவணன் மற்றும் பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர் சீனிவாச பெருமாள், கமால் முஸ்தபா உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்டம், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில், நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, சிறப்புரையாற்றினார். இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஏ.அசோக்குமார், மு.வாசிம்ராஜா, மூலனூர் எஸ்.கார்த்திக், ஏவிஆர்.கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் வ.முரளி, த.ரமேஷ் பங்கேற்றனர்.

# கும்பகோணத்தில் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பாகப் பொறுப்பாளர் பயிற்சிக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

தஞ்சை, பிப். 25 –

தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணத்தில் 'வெல்லும் தமிழ் பெண்கள்' பாகப் பொறுப்பாளர் பயிற்சி கூட்டம் மற்றும் வீடு வீடா கச் சென்று மகளிர் அணியினர் பரப்புரை மேற்கொண்டனர்.

கும்பகோணத்தில் உள்ள ராயா கிராண்ட் கூட்டரங்கில் 'வெல்லும் தமிழ் பெண்கள்' பாகப் பொறுப்பாளர் பயிற்சி கூட்டம் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கௌரி தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தஞ்சாவூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ. பங்கேற்று சிறப்புரையாற்றினார். அனைத்து பாகப் பொறுப்பாளர்களிடமும் கருத்துக்களை கேட்டறிந்து தீர்வு அளித்தனர்.

பின்னர் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப் பாளர்களுக்கும் எவ்வாறு வீடுவீடாகச் சென்று களத்தில் செயல்பட வேண்டும் என்ற காணொளி காட்சி ஒளிபரப்பி பயிற்சி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து ஒளிபரப்பப்பட்ட 'ஸ்டாலின் தொடரட்டும்' பாடலுக்கு அனைத்து மகளிர் மற்றும் தொண்டர் அணி நிர்வாகிகளும் தங்கள் கைகளில் மொபைல் டார்ச் ஒளியடித்தும், கை தட்டியும் ஆரவாரத்துடன் ஆதரவை தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து பெண்களின் உரிமைகள் மற்றும் சாதனைகளை மையமாக கொண்டு வீடுவீடாகச் சென்று தொடங்கப்பட்ட 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பரப்புரை மகளிர் மற்றும் தொண்டர் அணி பொறுப்பாளர்களுடன், கைகளில் இரு வண்ண கொடி ஏந்தி, ஊர்வலமாக சாலையில் சென்று, ஒவ்வொரு வீட்டிலும் இருந்த மகளிரிடமும் சாதனை திட்டங்களால் பெண்கள் அடைந்த எழுச்சியை எடுத்துரைத்து, வெல்லும் தமிழ் பெண்கள் கையேட்டினை அவர்களுக்கு வழங்கி, வீட்டின் வாசல் சுவற்றில் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்ற ஸ்டிக்கர் ஒட்டி தீவிர பரப்புரையை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டப் பொருளாளர் நடராஜன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், மாநகர நிர்வாகிகள் வாசுதேவன், பிரியம்.சசிதரன், ரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் செல்வராஜ், கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுபா திருநாவுக்கரசு, மகளிர், தொண்டர் அணி நிர்வாகிகள் தமிழ்ச்செல்வி, சுமதி மற்றும் நூற்றுக்கணக்கான மகளிர் மற்றும் தொண்டர் அணியினர், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# தி.மு.க. அயலக அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் – எ.வி.எச். ரஹமத்துல்லா 141/154, சோளக்கடை வீதி, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – பா. ரஞ்சித்குமார் 385, நடேசன் நகர், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எஸ். மணி பண்ணாடிபுதூர், காடையூர் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) கே. சண்முகவேலு 145/2ஏ, அபிராமி நகர், 2 தச்சன் சாலை, எல்லீஸ் நகர் அஞ்சல், தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638657. 2) சு. செல்வக்குமார் 1/29, இல்லியம்புதூர், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். விஸ்வநாதன் 6/95, மொட்ரபாளையம், கீரனூர் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 4) ஏ.பி. சந்திரமோகன் 23, எம்.எஸ்.பி. நகர், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 5) க. சதீஷ் 3/12, மேற்குபாளையம், எடக்கல்பாடி - 639202, திருப்பூர் மாவட்டம்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் – ரா. கார்த்திக்குமார் 3/73, எப். விளாமரத்துப்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642207, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – ஏ. காதர் அலி 3/104, மெயின் ரோடு, குமரலிங்கம், மடத்துக்குளம் வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642204.

அமைப்பாளர் - கே. சண்முகசுந்தரம் 15, விவேகானந்தர் நகர், காந்திபுரம், சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. அப்துல் இரகீம் 28, மகபூப்கான் லே அவுட், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) பெ. மோகன் 629, வடக்கு தெரு, கடத்தூர் அஞ்சல், மடத்துக்குளம் வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642203. 3) பி. சந்திரன் 226, விநாயகர் நகர், உடுமலைப்பேட்டை சாலை, மாக்கினாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம். 4) தா. சௌந்தர்ராஜ் போடிபட்டிபுதூர், போடிபட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642154. 5) முருகவேல் 3/28, விநாயகர் கோவில் வீதி, குடிமங்கலம் அஞ்சல், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642201. 6) க. மோகனசுந்தரம் 35ஏ/16, சீனிவாசா வீதி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் – அ. ஜான்சன் 7/84, சந்ததி தெரு, வடக்கன்குளம் - 627116, திருநெல்வேலி.

அமைப்பாளர் - ஏ. ஜோசப் சந்திரன் மெயின் ரோடு, ராஜகிரிஷ்ணாபுரம், லேவிஞ்சிபுரம் – 627114, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. மணி 126/201, சந்தனமாரியம்மன் கோவில் தெரு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 2) எஸ். பாசில் பக்கீர் மைதீன் 7பி/17, கீழகட்டளை தெரு, கோவில்பத்து, களக்காடு - 627501, திருநெல்வேலி. 3) குமரன் 8/225பி, ஊசிகாட்டான் தெரு, காவல்கிணறு, திருநெல்வேலி.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட டி.கே.கோபாலகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **எஸ். ஞானமணி**, (23, குளத்தங்கரை தெரு, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்) அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக **ஜி.ரவிக்குமார்,** (வந்தவாசி சாலை, பழம்பேட்டை, சேத்துப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம் - 604801) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### திருப்பத்தூர் மாவட்டம்

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஹமீதுத்தீன் அவர்கள் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **மு. ராஜேந்திரன்** (3, சிவன்படை வீதி, வளையல்கார தெரு, ஆம்பூர், திருப்பத்தூர்.) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்களாக **செ. நாகூர் மீரான்,** (5/2, கிழக்குத் தெரு, சித்தார் கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்), **மு. அஹமது இப்ராஹிம்** (கூரியூர், அச்சுந்தன்வயல், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23-02-2026.

**எம்.எம்.அப்துல்லா,**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி.




நாகை மாவட்டம், நாகை சட்டமன்றத் தொகுதி 'தமிழ்நாடு தலைகுனியாது' 'ஸ்டாலின் தொடரட்டும் ... தமிழ்நாடு வெல்லட்டும்'! 'திராவிட மாடல்' அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நாகை அவுரித்திடலில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் பேசினார். உடன் நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், நாகை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஆர்.அருள்செல்வம், மாவட்டப் பொருளாளர் மு.லோகநாதன், மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்.மணிவண்ணன், இரா.மாரிமுத்து, ஆர்.டி எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், என்.ஆனந்த், எம்.ஆர்.செந்தில்குமார், எம்.முகமது சுல்தான், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், மு.சாகுல் ஹமீது, வெற்றிலை கடை சிவா மற்றும் பலர் உள்ளனர்.



கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி, சரவணம்பட்டியில் மாவட்டத் துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட நீர் மோர் பந்தலை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார். இதில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆறுக்குட்டி, கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி, பகுதிப் பொறுப்பாளர், மண்டலகுழுத் தலைவர் கதிர்வேல், விளாங்குறிச்சி பகுதிப் பொறுப்பாளர் விஜயக்குமார், தியாகு, கதிர்வேல், கவிதா, தம்பி சிவபிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் - கொளக்காநத்தம் அரசு மேல்நிலைப்பள்ளியில்

# ரூ.90 லட்சம் மதிப்பிலான வகுப்பறை கட்டிடங்கள்!

## அருண்நேரு.எம்.பி. திறந்து வைத்தார்!

*பெரம்பலூர், பிப். 25 -*

*பெரம்பலூர் மாவட்டம், ஆலத்துார் வட்டம், கொளக்காநத்தம் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் MRF நிறுவனத்தின் சார்பில், பெரு நிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) திட்டத்தின் கீழ் ரூ.90 லட்சம் மதிப்பில் 2 புதிய வகுப்பறைகள் மற்றும் 2 ஸ்மார்ட் வகுப்பறைகள் என 4 புதிய கூடுதல் வகுப்பறை கட்டடங்களை பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு திறந்து வைத்து , மாணவ, மாணவியர்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஆலத்துார் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார்.*

*கொளக்காநத்தம் ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பயன்படும் வகையில், MRF மேலாண்மை நிறுவனம் தனது நிறுவன சமூக பொறுப்பு (CSR) திட்டத்தின் மூலம் பள்ளி வளாகத்தை நவீன மற்றும் எதிர்காலத்துக்கு தயாரான கற்றல் சூழலாக மாற்றும் நோக்கில் முக்கிய கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை மேற்க்கொண்டுவருகிறது.*

*அதன்படி, இப்பள்ளியில் 2 புதிய வகுப்பறைகள் கட்டடம் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பறையும் உயர்தரமான மேசைகள் மற்றும் நாற்காலிகளுடன் வசதியான மற்றும் நீடித்த பயன்பாட்டிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*மேலும் 75 இன்ச் அளவிலான இன்டர் அக்டிவ் டிஜிட்டல் திரைகளுடன், நவீன ஒலிஒளி வசதிகள் கொண்ட இரண்டு ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*இதன் மூலம் மாணவர்களின் புரிதல் திறன் மேம்பட்டு, கற்பித்தல் தரம் உயர்வடையும். இந்த மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பு மூலம் மாணவர்கள் நேரடியாக கல்வி பயன் பெறுவார்கள்.*

*இக்கட்டடத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கிணைந்த மழைநீர் சேகரிப்பு அமைப்பும் நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்நிகழ்வில், எம்,ஆர்.எஃப் நிறுவன பொது மேலாளர் நாதன், பெரு நிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) திட்ட ஒருங்கிணைப்பாளர் அஜிசிரியன், கொளக்காநத்தம் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் என்.ராகவன் மற்றும் எம்,ஆர்.எஃப் நிறுவன பணியாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.*

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தே. பொன்னுசாமி

**பிப்ரவரி 25 (1986)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**